


# அம்மா என் ஹைக்கூ

## ஹைக்கூ கவிதைகள்



கவிஞர்.
விக்னா பாக்கியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhöver 18a
47249 Duisburg
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா என் ஹைக்கூ

## ஹைக்கூ கவிதைகள்

கவிஞர். **விக்னா பாக்கியநாதன்**



வெளியீடு

கலைவிளக்கு

Droote - 19

44328. Dortmund, Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூலின் வகை : கவிதை (ஹைக்கூ)

ஆசிரியர் : திருமதி. பாக்கியநாதன்

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பித்த ஆண்டு : 2007

பக்கம் : 67

விலை : ரூ. 40/-

வெளியிடுபவர் : பாக்கியநாதன்
கலைவிளக்கு
ஜெர்மனி

அச்சிட்டவர் : R.R. டிசைனர்
23, கோபாலக் கொத்தன் தெரு,
மதுரை - 625 001 தமிழ்நாடு
போன்: 0452 - 4231225



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

புலத்திலே எம்மவர்களின் வாழ்வியல் முறைகளும் தாயகத்துச் சூழ்நிலைகளும் எம் இதயங்களில் ஏற்படுத்திய இரணங்களே இங்கு ஹைக்கூ கவிதைகளாகப் பிறப்பெடுத்துள்ளன. இக்ககவிதைகளைப் படித்ததும் உடன் மூடிவைக்க முடியாதவாறு சிந்திக்க வைப்பவையாக வாசிப்போருக்குப் பல கோணங்களில் பொருள் தருவனவாக அமைந்த ஹைக்கூ கவிதைகள் இன்றைய இயந்திர உலகுக்கு அத்தியாவசியமாகிவிட்டன.

மூன்று வரிகளில் எத்தனையோ சிந்தனைகளைத் தர வல்ல இக்கவிதைகள் படிப்போர் மனதில் தாக்கத்தையும், வலியையும் ஏற்படுத்தும் என நம்புகிறோம்.தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது அணிந்துரை வழங்கிய ஹைக்கூத் திலகம் கவிஞர். இரா. இரவி அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டு நூலுருவாக்கித் தந்த திருமதி. ஜெயச்சித்ரா இரவி அவர்களுக்கும், அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள். எமது கவிதைகளைப் பிரசுரித்து ஊக்குவித்து வரும் மனிதநேயம் ஆசிரியர். பேராசிரியர் ஜேம்ஸ் அவர்கள், ஏழைதாசன் ஆசிரியர் திரு. விஜயகுமார், இனியநந்தவனம் ஆசிரியர் திரு. சந்திரசேகரன், வேலணையூர் பொன்னண்ணா ஆகியோருக்கும் மற்றும் எம் தமிழுறவுகள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.


தமிழ்நெஞ்சங்களின் கரங்களிலே எமது இருபதாவது நூலாகத் திகழ்வதற்குக் காரணம் உங்கள் ஆதரவே.

நன்றி அன்புடன்,

**விக்னா பாக்கியநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

திருமதி. விக்னா பாக்கியநாதன் இவர் ஒரு பாரதி கண்ட புதுமைப் பெண் என்றே சொல்ல வேண்டும். மிகச்சிறந்த மரபுக் கவிஞர் மட்டுமல்ல புதுக்கவிஞர் மட்டுமல்ல மிகச் சிறந்த ஹைக்கூ கவிஞர் என்பதையும் இந்நூலின் மூலம் நிரூபித்து இருக்கிறார்கள். எப்படி இவரால் ஹைக்கூ எழுதிட நேரம் இருக்கின்றது என்று வியந்துபோனேன். இனவெறி கோரத்தாண்டவத்தின் காரணமாக புலம் பெயர்ந்து ஜெர்மனி சென்று அங்கு ஆசிரியர் பணி ஆற்றிக்கொண்டே இலக்கியப் பணியிலும் தொடர்ந்து ஓய்வின்றி இயங்கிக் கொண்டே இருக்கிறார்கள். தமிழ் அழியவில்லை என்பதற்கு புலம் பெயர்ந்த தமிழர்களே சாட்சி அல்லல்படும் வேதனை மிகுந்த புலம் பெயர்ந்த வாழ்க்கையிலும் தமிழுக்காக தொடர்ந்து பல பணிகளை ஆற்றி வருகின்றனர் பலர். அந்த பலரில் சிகரமாக இருப்பவர் திருமதி. விக்னா பாக்கியநாதன். கடுமையாக உழைத்துச் சேர்த்தப் பணத்தில் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று சுருங்கி விடாமல் கலைவிளக்கு என்ற இதழையும் நடத்தி வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள பல்வேறு சிற்றிதழ்கள் குறிப்பாக மனித நேயம், இனிய நந்தவனம், ஏழைதாசன், மதுரைத் தென்றல், தேசிய வலிமை என பல்வேறு இதழ்களுக்குமிகச்சிறந்த படைப்பாளர் என்பதற்கு இந்நூலே சாட்சியாகும். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் ஒரு பெண் நிற்கிறாள் என்பது பொன்மொழி. ஆனால் திருமதி. விக்னா பாக்கியநாதன் என்ற பெண்மணியின் வெற்றிக்கு திரு. பாக்கியநாதன் என்ற ஆண் முன் நிற்கிறார். இவருக்கு ஊக்கமும், ஆக்கமும் தந்து வாழ்க்கைப் பயணத்தில் மட்டுமின்றி இலக்கியப் பயணத்திலும் துணை நிற்கிறார். திருமதி. விக்னா பாக்கியநாதனுக்கு கவிதை மட்டுமல்ல கதையும் வரும். கட்டுரையும் வரும். இவர் ஒரு சகலகலா வல்லவர். இவருடைய ஹைக்கூ கவிதைகளில் சமுதாயச் சாடல் இருக்கும். மனிதநேயம் இருக்கும். நகைச்சுவை உணர்வும் இருக்கும். நூலின் உள்ளே சென்று படித்துப் பாருங்கள். உண்மையை நீங்களே உணருவீர்கள். தமிழ் மொழிக்கு என்றும் அழிவில்லை என்பதற்குப் புலம் பெயர்ந்த தமிழர்களே தமிழுக்குப் பலம் சேர்த்து வருகிறார்கள். திருமதி விக்னா பாக்கியநாதன் அவர்களின் கனவு மெய்ப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை. வாழ்த்திட வயதில்லை வணங்கி மகிழ்கின்றேன்.

அன்புடன்


**கவிஞர். இரா. இரவி**

6, தாளமுத்துப்பிள்ளை சந்து, வடக்கு மாசி வீதி, மதுரை – 1. தமிழ்நாடு

ஆசிரியர் : www.kavimalar.com மின்னஞ்சல் eraeravi@gmial.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நடைவண்டியில் குழந்தை
தள்ளுவண்டியில் வயோதிபர்
வாழ்க்கை வண்டி

வெள்ளத்தில் மீன்கள்
திசைகள் மாறிய நிலையில்
நிலையற்ற பணம்



நேரமின்மை பாலூட்ட
இயந்திர மூலம் கறப்பு
புட்டியில் தாய்ப்பால்





விஞ்ஞான உச்சம்
இணையத்தள உலகம்
ஊடகங்களில் சோதிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாதார நிரம்பல்
சொந்தவீடு உடைமைகள்
ஒட்டாத இல்லறத் துணைகள்



சர்வமதவாதி
பாரதியின் மூச்சு நிறுத்தம்
யானையின் மதம்




பிறருக்கு ஈயாத உலோபி
தானும் அனுபவிக்காதவர்
பெயருக்குப் பணக்காரர்



மனிதரைக் கும்பிடும் தாய்
ஆதரவு உதவியை எதிர்பார்த்து
கடமை தவறிய பிள்ளைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மனதில் தூசுகள்
உடன் அகற்றிடுவீர்!
அறிவுத் தூரிகையால்

உனது உடலுறுப்புகளின்
ஒழுங்கான இயக்கம்
மகிழ்வான சொத்து




அசையும் காட்சி இலவசம்
மனதுக்கு விருந்து
இரயில் பயணம்





பழுப்பு நிறமேலாடை
மண்ணுக்கு மரத்தின் தானம்
இலையுதிர்காலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்களுக்கு விருந்து
மனத்துக்குப் பட்டாசு
காசு கரியாகும் நத்தார்

விழிகளுக்கா மூக்குக்கா கண்ணாடி?
சுமைதாங்கியாக மூக்கு
பெயர் மாறாட்டம்



தொலைக்காட்சி ஈர்ப்பு
தொற்றிடும் சோம்பல்
சிந்தனை சிறைப்பிடிப்பு





இருந்தவை இல்லாதபோதில்
இருப்பதோ அதன் அருமை
பொய்ப்பற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பசியில்லாதவர்கள் அவர்கள்
வாய் வயிறு உள்ளவர்கள்
வயிற்றெரிச்சலை உண்பவர்கள்



ஓட்டைக் குடிசையிலே
வெள்ளி வைரத்தட்டு
தண்ணீர் வாளிக்குள் நிலா



நா வெறுத்தாலும் தாகம்
குடலைக் கருக்குபவை
உயர்ரகக் குடிவகை



எதிர்வீட்டுக் கோழி
என் வீட்டில் முட்டை
யாதும் ஊரே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கோடைகால வெப்பம்
தாகத்துடன் வீடு செல்ல
பொய்கையாக என்மழலை

வயலிலே மந்தை அழகு
குழந்தைகளுடன் உலா
சைவ உணவு அவா



உன்னுதல் எழும்பி விழுதல்
மீண்டும் விடா முயற்சி
தளராத பசுக்கன்று





தோழர்களே! ஓடி வாருங்கள்
மல்லிகை மழை இங்கே
பனிவிளையாட்டிற் சிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வயிறு நிறைய உண்பவர்
மேன்மேலும் உண்ண விரும்புதல்
தன்பற்களால் தனக்குச் சவக்குழி

வெள்ளைச் சேலையில் அவள்
பச்சை பச்சையாக மனம்
காலனிடம் கணவன்



கடற்கரையில் மீன் குவியல்கள்
சுற்றி மொய்க்கும் மனிதக் கும்பல்
கரையோர மீன்குஞ்சுகளுக்கு வேடிக்கை





பிள்ளைகளின் காலமாம்
பெற்றோர் சொல் கேளாமை
இளைய தலைமுறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வீட்டுக்கு வேலி
மனத்துக்கு மனச்சாட்சி
மொழிக்கு இலக்கணம்

எழுதாத வாழ்க்கைப் பங்காளிகள்
வெற்றிடம் அடிக்கடி வரும்
இணைய விண்ணப்பிக்கலாம்



பட்டமரமும் வாடிய செடியும்
திடீரெனத் துளிர்த்த அதிசயம்
மறுமணத்தில் மணமக்கள்






காலையில் எழுப்பிய சேவல்
கொதிக்கும் கறிச்சட்டிக்குள்
சேவற்குஞ்சுக்குப் புதிர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழையிலைக்குச் சோறு
ஏழையோ பசியால் போராட்டம்
நான் வாழையிலை ஆனால்...?



போதும் என்றது வாய்
இன்னும் என மனம்
விருந்தின் போது நாகரிகம்



விலையுயர் பழைய தளபாடங்கள்
கூலிகொடுத்து குப்பைமேட்டிலே
ஜெர்மனியச் சந்தையில் நவீனமாதிரிகள்



இரும்பு, மரத்தொழிலாளர்
ஒற்றுமையாய் வியாபாரியிடம்
இரும்புக் கடையில் அதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிறக்கும்போது மனிதன்
சுத்தமான வெள்ளைத்தாள்
அசுத்தமாக்கும் அவன் செய்கைகள்



அன்று பிள்ளைகளே சொத்து
பெற்றோர் சுகமும் சொத்தும் தேய்வது
இன்றைய வாரிசுகள்



கேட்பதெல்லாம் கொடுத்தல்
பிள்ளையில் கொள்ளைப் பாசமாம்
எதிர்காலம் பாழடிப்பு



பொன்னா? வெள்ளியா?
சமமான பார்வை
ஜெர்மனியக் கண்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழத்துடிக்கும் இளமை
எழிலான ஏழை மங்கை
தடுக்கும் வில்லன் சீதனம்



இல்லறத்தில் இல்லாள்
ஐவருக்குத் தாயானாள்
செல்வத்தில் இல்லாள்



மேனாட்டு வாழ்க்கை
விஞ்ஞானப் பெருக்கம்
உறவுகள் இடைவெளி



விதைத்து வளர்த்த விவசாயி
அறுவடையில் ஏமாற்றம்
இன்றைய இளையோர் சிலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணாடிக் கூடுகள்
களிப்பில்லா வாழ்வு
மேனாட்டில் எம்மினம்

மேனாட்டுக் குளிரூட்டிப் பெட்டியிலே
கோழிகளுக்கு நீண்ட வாழ்வு
மண்ணிலே வாழ்வு குறை



மலர் மாலையாகி வளையமாகி
மங்கலத்திலும் அமங்கலத்திலும்
சமமான திடமனம்





ஆ, உலகம் இவ்வளவு கொடுமையா?
உள்ளேயே இருந்துவிடலாம்
கர்ப்பத்திலிருக்கும் சேய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கருவைச் சுமந்தவள் அவள்
பிரசவம் இல்லாமல் குழந்தை
அறுவைச் சிகிச்சை

அடைகாத்த ஆல்வா எடிசன்
மின்குமிழ் கண்டுபிடிப்பு
அடைகாத்தலின்றிக் குஞ்சு பிறப்பு



வெள்ளீயத் துகள்கள்
காற்றிலே பறந்து குளிர்மை
நயாகரா நீர்வீழ்ச்சி






நள்ளிரவு வேளை
சரிகமபத நிச
குடிசைக்குள் மழைநீர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காற்றைப் பிடிக்கலாம்
நீரை வெட்டலாம்
தன்னம்பிக்கை உறுதியானால்



வெண்ணிற நிலவிரிப்பில்
கரும்பாதச் சுவடுகள்
தெருவீதி பனிப்படுக்கை



ஓவியப்போட்டியில் வெற்றி
மீன் பிடிக்கும் சிறுவனின் காட்சி
வாழ்வில் உண்மையானால்?



நீரே ஆதாரம்
அந்த நீராலே அழிவு
சுனாமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீரென்றால் ஈரம்
ஈரமனம் எங்கே?
சுனாமியின் சீற்றம்

காலுள்ளவர் நடக்கலாம்
கையுள்ளவர்களால் எழுதலாமா?
தேவை படிப்பறிவு



இயந்திரங்களுடன் மக்கள்
நோயும் முதுமையும் விரைவில்
சிகிச்சையும் இயந்திரங்களில்






வெற்றுப் பெட்டியுடன் கூலிகள்
மாத்திரைகள் பெட்டியுடன் செல்வந்தர்
வாழ்வே திண்டாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரம் பிசகாமல்
குறிப்பிட்ட தரிப்பில் நிற்பவர்கள்
கடிகார முட்கள்

சமுதாயம் ஏளனப் பார்வை
ஒதுக்கப்பட்டுவிட்டோமா நாம்?
ஓய்வூதியக்காரர் நிலை



சிறுவர்பள்ளி ஆசிரியையின் பேச்சு
பெற்றோரே முதலாசான்கள்
மகளோ பேர்த்தியிடம்





இன்றைய உலகில்
பூட்டியிருப்பவை கதவுகளல்ல
மனித நேயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாற வேண்டும் பெற்றோர்
பிள்ளைகள் அல்ல
பழைமை வாதம்

மௌன அஞ்சலி
கலைக்கும் ஒலி
வீறிடும் மழலை



கடுங் கோபச் சூரியன்
அழகு காட்டும் நிலமகள்
பல வர்ண ஆடைகளில்





வீதிக்கரை வீட்டு முற்றம்
சீமெந்துச் சமதளம் அங்கே
இங்கு சகதிக்குடிலில் ஏழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நான்கு விழிகளின் திடீர்மோதல்
இதயங்கள் இடம்மாறிப் பரபரக்க
காதலுக்கு மரியாதை

பலபிள்ளை பெற்றவளுக்கோ
கருவுறாதிருக்க கர்ப்பத்தடை
மலடிக்கு மங்கலவிழாவிலே தடை



வெறும் வெள்ளைக்கோடு
தாண்டாத வாகனங்கள்
நெடுஞ்சாலை எல்லைக் கோடு






அறிவூட்டும் ஆசான்
ஆசிரியர் ஒதுக்கம்
இணையத் தளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைபோதனைகள்
வெவ்வேறு மதங்கள்
உலகிற் பல உலகம்



மீளாத் துயிலில் ஒருவர்
எந்த மதத்தில் அடக்கம்?
மரணவீட்டிற் கலவரம்




மடத்துக்கு அனுப்புதல் தவிர்த்தலால்
வயோதிபப் பெற்றோர் தவிப்பு
வீட்டிலே பூட்டிவைப்பு




மனத்திலுள்ள நினைப்பு
கைகளில் காண்பிக்கும் உருவங்கள்
குயவனின் படைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உனக்கு ஆயுள் எண்பது
சொன்ன சோதிடர் அகாலமரணம்
தம்நிலை புரியாமை



மங்கல நாணின்றிக் கழுத்து
சுமங்கலி பெண்ணவள்
பகுத்தறிவுத் திருமணம்




நடக்க நடக்கத்
தொடர்ந்திடும் நிழல்
முடிவற்ற ஆசைகள்



ஜெர்மனியக் கல்லூரிகளிலே
மாணவர்களின் கூட்டுப்படிப்பு
கவலைப்படாத கற்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூஞ்செடிகளுக்கு ஏக்கம்
செயற்கைப் பூக்கள் உள்வீட்டினில்
செவிலித்தாய் கையிற் பிள்ளை



அடிக்கடி மாறுவது
மேனாட்டுக் காலநிலை மட்டுமல்ல
பெண்கள் மனங்களும்



மாடிவீடு பஞ்சுமெத்தை
உறக்கமின்றி உழல்தல்
வீதியோரத்தில் ஏழை ஆழ்ந்த உறக்கம்



எங்கே அழுக்கு?
மழலையின் உடல்
தாய்க்கு நறுமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆட்டின் மீது பார்வை
முதலையின் கண்ணில் நீர்
குறிவைக்கும் மனிதன் பின்னே

காலைப் பொழுது
பூபாள இராகம்
மழலையின் அழுகை



மாரிகாலச் சூறாவளி
பனங்கூடல் அமைதி
வட்டிழந்த பனைகள்






உடலை முடிப் போர்த்து
உறங்கவே முடியவில்லை
பனியிலும் பணிக்கும் தொழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் போக நீ வருவாய்
காவோலையின் அறிவுரை
புரியாமற் குருத்தோலை

இரவு முழுவதும் பாடல்
தொண்டை கட்டி மரணம்
தவளையின் விதி



பாலம் எதுவும் இல்லை
விண் மண்ணை இணைக்கும்
நேர் கோட்டு மழை






வேப்ப மரத்தில் வெண்பூக்கள்
பூவனமாகப் பாடும் குயில்கள்
கீழே வடகக்காரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிநாட்டுப் பணத்தில் கட்டியவீடு
கிருகப்பிரவேசம் இல்லை
சிங்களச் சிப்பாய் குடிபுகல்



அதிர்ஸ்டமா? துர்திஸ்டமா?
ஒரே நேரத்தில் கணிப்பு
அதிர்ஸ்டலாபச் சீட்டு



எல்லாமே கிடைக்கின்றன
புலம்பெயர் வாழ்வில் குறைவின்றி
உண்மைப் பாசம் தவிர



அசையாது நின்ற மரமோ
காற்றுக்கு அசைந்தது
பணக்காரனின் கல் மனம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தலைமுடி அலங்காரம்
பாதிமொட்டை பாதிசடை
இன்றைய இளையோர் சிலர்

கொடுப்பது குற்றமா?
இரக்கமற்றுக் கொலை
குலையீன்ற வாழை



பனிக்காலக் காற்று
தம்முட் தாம் அடிபடுதல்
இலையுதிர் மரக் கொப்புகள்






தட்டு நிறைந்த உணவு
ஏழைச் சிறுவனின் மகிழ்வு
பகற்கனவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய மனிதன்
தெரிந்து சிக்கிவிடும் வலை
இணையத்தள வலைகள்

சிறிய விதையில் உருவாகி
ஈன்றவரைத் தாங்கும் விழுது
பென்னம்பெரிய ஆலமரம்



மேடையில் தமிழுணர்வுப் பேச்சு
தேமதுரத் தமிழோசை பரவுக
வீட்டில் டொச்மொழிக்கு உபசாரம்






சாதிமதம் ஒழிப்போம்
வெளியிலும் மேடைப் பேச்சிலும்
பனிமூடிய கல்லாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தன் உயிர் கொடுத்து
இன்னோர் உயிர்க் கொலை
தூண்டிற் புழுவும் மீனும்

மதியும் கதிரும் கைகுலுக்கல்
பொன்னொளிப் பந்தரின்கீழ்
அந்திவான அழகு



அழைப்பின்றி வருகை
சுவடின்றி மறைவு
கோடை மழை






வாழ்த்தி பாராட்டுதல்
தூற்றித் திட்டுதல்
ஒரே நாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழிக்கணைகளில் விஷம் தடவி
வீசிடும் பார்வை கருக்குமா?
திருஷ்டி படல்



தாயின் வயிறு நிறைவு
சேய் அள்ளியள்ளி உண்கையிலே
தொப்புள்க் கொடியுறவு



விதவை சூடினாள் மாலை
தன்காலில் நிற்கும் எழுச்சிப் பெண்
வாழ்த்துப்பா மாலையுடன் புகழ்மாலை



கட்டுப்பாடற்ற பிள்ளை
கட்டாக்காலி மாடுகள்
ஏற்ற இறக்கம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமைதியான இல்லறம்
இன்பக்கடலில் திடீரென
சந்தேகக் கற்கள்

கடற்கரையோர மணல்
செல்வர் காலுக்கு அப்பியாசம்
கல்மீது நடக்கும் ஏழைக்கு?



உலகை அறியாதவர்களுக்கு
உலகறிந்தவர்களின் பரிசு
போர்க்களம்





பொலிப்பாட்டு வயலிலே
சூடடித்துப் பொலி! பொலி!
பொலியாத நெல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் இனிச் செல்வந்தர்
சிறுமியின் மகிழ்ச்சி
தீபாவளிப் புதுச்சட்டை

இல்லத்தின் முகப்பிலே
அழகிய தமிழில் அன்னையில்லம்
அன்னையோ மடத்திலே



எனக்குள்ளே நீ தான்
உனக்குள்ளே நான் பிரியாமல்
மனச் சாட்சி





இயற்கை வாழ்வில் விலங்கினம்
மனிதனோ செயற்கையில்
எதிரியாக்கினான் இயற்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செம்மையிலும் வறுமை
மனங்களிலே வெறுமை
தாயகம் தாண்டியோர்

கலைவாணி கையில் ஏடு
கற்கப் பலவுள எனும் வெளிப்பாடு
முழுவதும் கற்ற கர்வத்தில் பலர்



தூய்மையான இடம் ஆலயம்
பக்தர்களின் மனச்சுமைகளால் அசுத்தம்
இறைவனே சுத்திகரிப்பு






மண்ணில் விதையாகப் புதைப்பு
மாவீரர்கள் தமிழீழத்திலே
முளைவிடும் சுதந்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயிற்குஞ்சின் கூக்குரல்
காகங்கள் படையெடுப்பு
வளர்ப்புத்தாய் மனமோ?

குழலிசையும் யாழிசையும்
எங்கிருந்து வருகின்றன?
பிரசவ விடுதி அதோ!



வைத்தியசாலையில் ஆரவாரம்
நோயாளிகள் பராமரிப்பு
பார்த்தவருக்கு ஞானம் பிறப்பு





நல்லகாலம் வரும்
நம்பிக்கையில் வாழ்வு
ஏழையின் உள்ளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓ…என் குழந்தை!
பாறையின் இடுக்கிலே
ஆலமரத்தாய்.



மணம் புரியாது இல்லறம்
விவாகரத்துச் செலவு மிச்சம்
மேனாட்டிற் சிலர்




தண்டிக்க வேண்டியது
நீதியோ சட்டங்கள் அல்ல
தன்னைத் தானே



பசியாதிருக்க மாத்திரை தேடும் ஏழை
இதே மாத்திரைக்கு ஏங்கும் செல்வன்
தன் உடற்கட்டுப் பேணிவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மணமன் வரவு கண்டு
மண்பார்க்கும் மணமகள்
மாறாகச் சூரியகாந்திப் பூவை

மனக்குடிசையில் நெருப்பு
மற்றவர் வசதிகண்டு சகியாமை
தமக்குத்தாமே தேடும் அழிவு



ஏழையின் கண் படாத
செல்வந்தனின் சமையலறையில்
அவன் கைபட்ட காய்கறி





விஞ்ஞானக் கண்டுபிடிப்பு
வருந்தி உழைக்காத உடல்
ஊதியமாகப் புதுநோய்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழையின் வாழ்க்கையில்
நிம்மதியும் சுகமும் மகிழ்வும்
சீச்சீ! இப்பழங்கள் புளிக்கும்



மனிதனே உருவாக்கி
அதற்காக ஏங்கித் தவிப்பு
பணக்கடவுள்



வாழ்வில் வரும் உறவுகள் பல
வழித்துணையாக இறுதிவரை
உயிரற்ற ஊன்றுகோல்



பசிக்கிறதே என்று தொழிலாளி
பசியில்லையே என முதலாளி
உயர்ந்தவர் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருடத் திட்டமிடுபவர்களை
திட்டமிடாமலே பிடிக்கும்
ஜெர்மனிய சட்டங்கள்

தனிமைக் கொடுமை
மனங்கள் சுத்திகரிப்பு
சிறைக் கைதிகள்




திருமதிப் பதவிக்கு
உண்டு அனுபவம்
விதவையின் விண்ணப்பம்





வயிற்றிலே கரு
வளரும் உயிர்
மறைக்க முடியாதது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிலவேளை பைத்தியமாக அவன்
மணமானால் மாறுமாம்
தெளிவுடன் வருபவள் நிலை?

மேலைத்தேச சுகபோக வாழ்விலும்
ஒருசிலவற்றில் தட்டுப்பாடுகள்
கண்ணீருக்கும் கடவுள் பக்திக்கும்



போட்டி போட்டு உழைப்பு
இயந்திரங்களுடன் மனிதர்கள்
இதயங்களும் இயந்திரம்





கோடீஸ்வரனின் சொகுசு இரத்தம்
குடிசைவாசியின் உழைப்பு உதிரம்
பேதமில்லை நிறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மணமானாலும் ஆகாவிட்டாலும்
பிரிவினை உணர்வுகள் நிதம்
இன்றைய இளையோர் நிலை

இறைபலி நிறுத்தம்
உயிர்க்கொலைக் கருணை
இறைச்சிக் கடைத்திறப்பு விழா



உறைத்திடும் உணர்வு
நாவினுக்கு மட்டுமல்ல
கடுஞ்சொல் கேட்ட செவிக்கு





சுயதொழில் ஊக்குவிப்பு
தமிழகத்துக்கு வருமானமாம்
அடுப்பங்கரையில் பெண்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மரங்கள் குளிப்பதில்லை
நறுமணத்துடன் தூய மலர்கள்
மனிதருக்குள்ளேயும் சிலர்

சிறுமி கையில் ஓடு
வியாபாரி கண்ணில் காமம்
இருவகைப் பசி



மரக்கன்று நாட்டல்
முண்டாக மரக்குற்றி
இறந்தும் உதவும் மனம்






வள்ளுவரின் வாய்மை
முடியுமா இன்று?
போதனை கேட்ட மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குசினி குழந்தை கோவில்
காரிகைக்குரிய தளைகளா?
அவை இனி கூட்டுக்குள்

புலவர் கற்பனைப்படி
பூங்கொடியும் மங்கையும் சமமெனில்
பூவிழந்த கொடி விதவையா?



உண்மை பொய்யாகும்
பொய் உண்மையாகும்
நா நயம் அற்றவர்கள்






கள்ளிப் பாலும் வெள்ளை
பசுப்பாலும் வெள்ளை
கண்கட்டி வித்தையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





செயற்கையின் அதிசயம்
கோழிக்குஞ்சுகள் பிறப்பு
தாயறியாச் சேய்கள்

அஃறிணையில் பெண்ணுயர்வு
ஆறறிவிலே அது இழிவாம்
உயர்திணை எது?



தொடருந்துப் பயணம்
நேரெதிர் இருக்கையில் இருவர்
இன்றைய நட்பு





அழகிய நாகரிகக் கட்டடம்
ஒழுங்கான பயிற்சி நெறி
நாய்கள் பயிற்சிக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓரே கட்டடத்தில் பலகுடும்பம்
தொடர்பற்ற மனிதர்
ஒருவீட்டில் ஓருயிர்

நித்திரையிலும் நினைவு
வாயிலிருக்கும் சூப்பி
குழந்தையின் சொத்து



உடலில் இரண்டு முகம்
ஊசலாடும் உயிர் ஒன்று
பாம்பின் வாய்த்தவளை





மேடையிலே செவ்விய தமிழ்
தன்மகவுடன் பிறமொழி
மொழிக் காவலராம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழந்தை உண்டா?
மேனாட்டு அலுவலகக் கேள்வி
முதிர்கன்னி கல்யாணி

மனச்சாட்சி உறக்கம்
மனக்குரங்கு குதூகலம்
ஏமாற்று நடவடிக்கைகள்



அங்கே பதுங்கு குழி
இங்கே நிலவறை
உயிருடன் மண்ணுக்குள்





மரங்கள் நிர்வாணமாக
மானங் காக்கும் துடிப்பில்
மார்கழிப் பனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலயத்தில் தெய்வீக மணம்
மரணவீட்டில் பிணவாடை
ஒரே இனப்பூக்கள்

மூவேளை உணவுக்குப் பின்
முப்பது துளி மருந்து அருந்துக
உணவுக்கு வாடும் ஏழை



கோழி தாராச் சிறகுக்குள்
எடுக்கவும் புதைக்கும் மனிதமுகங்கள்
தலையணைக்குள் இறகுகள்







ஆரோக்கியத்தை ஆராய்தல்
அதிக நேரம் செலவிடல்
ஐம்பதைத் தாண்டியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கப்பல்கள் உயிர்பெற்று
உலகெங்கும் பயணம்
உயிரளிக்கும் நீரலைகள்



இன்பமும் துன்பமும்
விரிந்தும் விரியாததுமான மலர்கள்
வாழ்க்கைச் செடியிலே




அன்று அறுபதிலும் காணாதவை
ஆறுமாதக் குழந்தை அனுபவிப்பு
இன்றைய தொழினுட்பங்கள்



பூ பிஞ்சு காய்கனிகள்
பெருமையுடன் மரங்கள்
அர்ப்பணிப்புடன் வேர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதலர் சந்தித்து ஒருமனம்
பெற்றோர் பேசித் திருமணம்
இருவரும் பேசாததால் விவாகரத்து

ஒரே விழிகள் தான்
உணர்ச்சிக்கேற்ப நீர்ப்பெருக்கு
கண்ணீரின் நிறம் வைரம்



நடைபாதைப் புற்கள்
பலராலும் மிதிபடல் விதி
ஏதுமறியாத ஏழைகள்






பழைய காதல் மீட்டல்
புதிய காதல் பகிரங்கம்
காதலுக்கு ஒரு தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதலி கண்ணில் நீர்
துடைக்கத் துடிக்கும் என்கரம்
தடுக்கும் தாலிக் கயிறு



நிலமகளின் உடலில்
மனிதனின் சித்திரவதை
தாங்கும் இதயம்




மாரிமழை வெள்ளம்
பாம்பும் அட்டையும் தஞ்சம்
வசதியாக ஏழை வீடுகள்



மூங்கில் மரக்காடு
மனிதன் கை பட்டதால்
தேவகானம் அங்கே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடிசை முற்றம்
அசையும் தீபங்கள்
மாந்தளிர்கள்



கூடிச் சூழ்ந்த உறவுகள் அன்று
சுருங்கிய உறவுகளாகின இன்று
குறுகின மனிதநேயம்



விஞ்ஞான வளர்ச்சி
வியத்தகு விந்தைகளுடன் மனிதன்
நூற்றாண்டுகள் தான் ஆயுள்




விழிகளில் ஹைக்கூ
வார்த்தையில் பரணி
காதலி மனைவியான பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரத்த உறவு என்பது வெளிநாட்டில்
பெற்றோர் பிள்ளை உறவு மட்டுமே
மற்றையோர் மூன்றாம் நபர்கள்



பூனை உணவுகள் பேணிகளில்
விளம்பரத்துடன் பல கடைகள்
நன்றிப் பெருக்கில் எலிகள்




மற்றவருக்காகவே உழைப்பு
தனக்கென்று விரும்பாதவர்
சவப்பெட்டித் தொழிலாளி



சிறுமியின் மனதில் சஞ்சலம்
ஒதுக்கப்பட்டுவிட்டேனா?
தம்பி அவதாரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதவாத பிள்ளைகள்
பிள்ளை இல்லாதவர்கள்
இரண்டுமே சமம்

வயிற்றிலே கரு தடுப்பின்றி
ஏழையின் ஏக்கம்
பலநூறில் அழிப்பு



பெண்ணிலை வாதப் பேச்சு
பெண்கள் இச்சைப் பொருளா?
மனைவி அடிக்கடி கருக்கலைப்பில்





வயது வந்த பிள்ளைகளின்
பல் கோண வளர்ச்சி
காயை மறைக்கும் இலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிச்சயித்த மகளின் திருமணம்
உறவுகள் கூடி எதிர்ப்பு
நாற்பது வயது முதிர்கன்னி

மத்தளக் கலைஞர் அவர்
மாலைகளுடன் மரியாதை
மத்தளமாக என் இதயம்



என்மழலையும் உன்மழலையும்
நமது மழலையுடன் விளையாடுதல்
வள்ளுவர் காணாத மழலையின்பம்





கோடைச் சூரியனுக்கு அச்சம்
ஆடைகள் வீட்டில் குடியிருப்பு
திறந்த மேனிகள் வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழந்தையின் சிரிப்பு
வெடித்துப் பறந்த எச்சில்
பன்னீர்ப் பூக்களாகத் தாய்க்கு

அரை அவியல்
பார்த்தால் பச்சை
நிறத்திலா? தன்மையிலா?



ஈருயிர் ஓருடல்
சுமையிலும் சுகம்
தாய்மை






துப்பாக்கியில் பிறந்த
குண்டுகள் பல
உயிருக்கு மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பசுவென்றால் பூஜிக்கும் தெய்வம்
காளைகள் கறிக்கடைச் சொத்து
பசுவின் பிறப்புக்கு காரணம்???

சமாதானம் தூய்மையான
அறிகுறிகளாக வெண்ணிறம்
அமங்கலி....??



இறைச்சிக் கடையில் கூட்டம்
விரட்டிய நாய்கள் நாவில் நீருடன்
கண்ணீருடன் கோழித்தலைகள்





கடற்கரையோரச் சங்கு
ஆலய மூலஸ்தானத்திலே
திருநீற்றுச் சிமிழாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உணவுவகைப் பெருக்கம்
உடற்கட்டுறுதி அவா
பட்டினி வைத்தியம்

தன்னினத்தை அழித்திட
தானே கருத்தாவா?
கோடரியின் கவலை



வயோதிபத் தாய்க்கு நான்காவல்
தனது நாய்க்குக் காவல்
ஜெர்மனியப் பெண்ணொருத்தி






வேலைகள் வெற்றிடப்
அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்க!
நாய்முடி (மயிர்) திருத்தும் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கழிவுகளை உண்டு
தூய்மையாக்கும் பணி
குப்பை வாளி

சூறாவளிக் காற்று
மாமரத்துடன் மோதல்
சிறார் கையில் மாங்காய்கள்



வெட்டுண்ட புற்கள் பரிதாபமாக
விலங்குகளை நினைத்தபடி
வீடு வீதிகள் அலங்காரம்





இளமைப் பருவம் வசதியில்லை
வளந்தேடி ஓடியுழைப்பு
வசதி வந்திட இளமையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமுதாயச் சீரழிவுகளுக்கு ...
## சாட்டையடி

கால மாற்றத்தால் கவிதைகள் தன் வடிவத்தை மாற்றிக் கொண்டுவிட்டது. இதுதான் புதுக்கவிதையின் தோற்றம். இந்தத் தோற்றத்தில் கூட சிலர் முற்போக்கு பிற்போக்கு எனறு தங்கள் சிந்தனைக்கு சிறப்புப் பெயர் சூட்டிவிடுகிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில் வாசகருக்குப் புரியும்படி எழுதுவதே கவிதை உங்கள் கவிதை எனக்குப் புரிகிறது.

ஆழமாகச் சிந்தனையைத் தூண்டி அழுத்தமாக ஒரு கேள்விக்கணையைத் தொடுத்து ஆணித்தரமாக பதிலைக் கூறுவதுதானே கவித்துவம். இதுதான் ஹைக்கூவின் இலக்கணம் இந்த உத்தியை மிகத் திறமையாகக் கையாண்டுள்ளீர்கள். தங்களின் "அம்மா என் ஹைக்கூ" கவிதைத் தொகுப்பு இன்றைய சமுதாயச் சீரழிவுகளுக்கு சாட்டையடி கொடுப்பதுபோல் அமைந்துள்ளது. துணிச்சலான முயற்சி.

இந்த முறையில் ஹைக்கூ கவிதைகள் எழுதுபவர்கள் விரல் விட்டுக் கணக்கிடக் கூடியவர்கள் மிகச்சிலவே. அவர்களில் ஒருவர் நான் பெறாத பிள்ளை. உலகத் தமிழ் எழுத்தாளர் சங்க மதுரைக் கிளையின் செயலாளர். செயல்வியர் இரா. இரவி. சமுதாயச் சீரழிவுகள் பொதுவாக இருந்தாலும் கண்ணில் பட்ட மாத்திரத்தில் மனதில் பதித்து அடுத்த வினாடியே கவிதை வரிகளாகத் தெறிக்கும்படி செய்யக் கூடியவர்.

கண்ணில் பட்ட காட்சி கண்ணிமை மூடித்திறப்பதற்குள் எண்ணத்தில் பதிந்து எழுதுகோலில் புகுந்து காகித்தில் பதிவு பெற்றிடல் வேண்டும். கவிதை பிறக்க வேண்டுமே தவிர. உருவாக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையப் பேர் ஒரு கருத்தைக் கவிதையாக்க, மாடு அசை போடுவதுபோல ஆற அமர அசைபோட்டு, அகராதியில் வார்த்தைகளைத் தேடிப்பிடித்து, அவற்றை முன்னுக்குப்பின் முரணாக வரிகளில் கோர்த்து விடுவது கவிதையல்ல வெறும் சிலம்பாட்டமே.

வார்த்தைகள் தேடும் கவிஞராக இருக்கவேண்டுமே தவிர, வார்த்தைகளைத் தேடும் கவிஞராகிவிடக் கூடாது.

தங்கள் படைப்புகளை மனிதநேயம் ஏழைதாசன் பத்திரிக்கைகளில் படித்துள்ளேன். ஒரு சிறிய வேண்டுகோள். தங்களிடம் திறமை இருக்கிறது. கவிதை தவிர கட்டுரை, கதைகளும் எழுதவேண்டும்.

அணிந்துரையோடு ஆரம்பமாகிறது; துணிந்து பல நல்ல ஹைக்கூ படைப்புக்களைத் தந்துள்ளீர்கள். எனக்கு மிக மிகப் பிடித்தமான சிலவற்றை இத்துடன் குறிப்பிட்டுள்ளேன்.

தங்கள் திறமைக்கு என் மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

சர்வ மதவாதி
பாரதியின் மூச்சு நிறுத்தம்
யானையின் மதம்

காலையில் கூவி எழுப்பிய சேவல்
கொதிக்கும் கறிச்சட்டிக்குள்
சேவற்க் குஞ்சுக்குப் புதிர்

பிள்ளைகளின் காலமாம்
பெற்றோர் சொல் கேளாமை
இளைய தலைமுறைகள்

நீரென்றால் ஈரம்
ஈரமனம் எங்கே?
சுனாமியின் சீற்றம்

வெற்றுப் பெட்டியுடன் கூலிகள்
மாத்திரைப் பெட்டியுடன் செல்வந்தர்
வாழ்வே திண்டாட்டம்

எம்மதமும் சம்மதம்
என்போரை மதம்
அழித்துவிடும். இன்றும் அப்படித்தான்

பழுத்த அறிவு
பகுத்தறிவுக்கு
உணவு

தலைகால் புரியாத
புதிய தலைமுறை

நீரென்றால் ஈரம்
நீர்! என்றால் ஈரமற்றவர்
என்று அர்த்தமோ?!

மருத்துவர்கட்குக்
கொண்டாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு ஆயுள் எண்பது
சொன்ன சோதிடர் அகால மரணம்
தம்நிலை புரியாமை

விதியை வெல்ல
யாரால் முடியும்?

நடக்க நடக்கத்
தொடர்ந்திடும் நிழல்
முடிவற்ற ஆசைகள்

நப்பாசை
நைக்கப் போகும் வாழ்வைப்
பற்றி சிந்திப்பதில்லையே!

கொடுப்பது குற்றமா?
இரக்கமற்ற கொலை
குலையீன்ற வாழை

வாழையென்ன
வாழ வைத்தவர்கள்
கதியும் அப்படித்தான்

நடைவண்டியில் குழந்தை
தள்ளுவண்டியில் வயோதிபர்
வாழ்க்கை வண்டி

வாழ்க்கைச் சக்கரம்
உருண்டு ஓடிக்கொண்டே
இருக்கும் மனித மனத்தின் சபலம்

விஞ்ஞான உச்சம்
இணையத்தள உலகம்
ஊடகங்களில் சோதிடம்

ஊடகமே நம்மை
சோதிக்கும் இடம்தானே!

அசையும் காட்சி இலவசம்
மனத்துக்கு விருந்து
இரயில் பயணம்

அனுபவித்து எழுதிய
அருமையான
அனுபவம்

விழிகளுக்கா மூக்குக்கா கண்ணாடி?
சுமைதாங்கியாக மூக்கு
பெயர் மாறாட்டம்

சிறப்பு

பசியில்லாதவர்கள் அவர்கள்
வாய் வயிறு உள்ளவர்கள்
வயிற்றெரிச்சலை உண்பவர்கள்

நல்லசூடு

மேடையிலே செவ்விய தமிழ்
தன் மகவுடன் பிறமொழி
மொழிக் காவலராம்

எவ்வளவு
துணிச்சல்!

மரங்கள் நிர்வாணமாக
மானங் காக்கும் துடிப்பில்
மார்கழிப் பனி

இயற்கையின்
இயற்கையான
இரசனை

திருச்சி. **சந்தர்**
தென் மண்டல அமைப்பாளர்
உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கம்
10, இராமமூர்த்தி ரோடு, சின்னசொக்கிகுளம்
மதுரை - 2. செல் : 94437 43524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹைக்கூபணி ...

# தொடர்வது நல்லது

சஞ்சீவ் பாட்லாவின் 'ஹைக்கூ மை ப்ரண்ட்' என்னும் ஆங்கிலத் தொகுப்பை 'ஹைக்கூ என் தோழி'யென மொழிபெயர்த்து தமிழில் ஹைக்கூ உலகிற்கு அளித்திருந்தார் கவிஞர் மித்ரா. ஹைக்கூவை தோழியாக பார்த்துள்ளார். அம்மாவை ஹைக்கூவாக பார்த்து கவிஞர் விக்னா பாக்யநாதன் தந்துள்ள தொகுப்பு 'அம்மா என் ஹைக்கூ' 'கடுகு வயல்' தொகுப்பு மூலம் ஹைக்கூ உலகில் காலடி பதித்தவர். கவிதை உலகில் இயங்கி வருபவர். புலம் பெயர்ந்தவர்.

"நடைவண்டியில் குழந்தை
தள்ளுவண்டியில் வயோதிபர்
வாழ்க்கை வண்டி" என்பது முதல் ஹைக்கூ. வாழ்க்கை என்பது ஒரு வண்டியில் தொடங்கிஇன்னொரு வண்டியில் முடிவடைகிறது என்கிறார். வாழ்க்கையே ஒரு வண்டிதானே? வாழ்க்கைக்குத் தேவை வசதி இல்லை. பணம் இல்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அன்பு பரிமாறி வாழவேண்டும்.

"பொருளாதார நிரம்பல்
சொந்தவீடு உடைமைள்
ஒட்டாத இல்லறத் துணைகள்" மூலம் இணைந்துவாழ வலியுறுத்துகிறார். எல்லாம் இருப்பது வாழ்வாகாது. இணைந்து வாழ்வதே வாழ்வு.

"வீட்டுக்கு வேலி
மனத்துக்கு மனசாட்சி
மொழிக்கு இலக்கணம்"

என ஒவ்வொன்றுக்கும் எதெது அவசியம் என்கிறார். இது ஹைக்கூவாகாது. ஹைக்கூ என்பது மூன்றாமடியில் ஒரு திருப்பம் வேண்டும். இது மூன்றடி உள்ளதே தவிர ஹைக்கூ குணமில்லை.

கவிஞர் ஜெர்மனியில் வசித்து வருகிறார். மேல்நாடுகளில் மக்கள் வாழ்நிலை வேறாக உள்ளது. காரணம் விஞ்ஞான வளர்ச்சி என்கிறது.

"மேனாட்டு வாழ்க்கை
விஞ்ஞானப் பெருக்கம்
உறவுகள் இடைவெளி"

என்னும் ஹைக்கூ . இது ஹைக்கூவிற்குரிய செறிவுடனுள்ளது. அடுத்து

"கண்ணாடிக் கூடுகள்
களிப்பில்லா வாழ்வு
மேனாட்டில் எம்மினம்"

என புலம்பெயர்ந்தவர்களின் நிலையையும் எடுத்துக்காட்டுகிறார். மனிதர்கள் வாழ்வின் வேகம் அதிகரித்துவிட்டது. எல்லாம் இயந்திரமாகிவிட்டது. இயந்திரத்துடன் இயந்திரமாகவே இயங்குகின்றனர். இதனால் இறுதிக் காலமும் இயந்திரங்களுடன் வாழ வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

"இயந்திரங்களுடன் மக்கள்
நோயும் முதுமையும் விரைவில்
சிகிச்சையும் இயந்திரங்களில்"

என்னும் ஹைக்கூ மூலம் இயந்திரங்களாகிவிட்ட மனிதர்களின் சூழ்நிலையை சுருக்கமாக கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெற்றுப் பெட்டியுடன் கூலிகள்
மாத்திரைப் பெட்டியுடன் கூலிகள்
வாழ்வே திண்டாட்டம்"

மூலம் முந்தையற்கு மாறுபட்டு செல்வமிருக்குமிடமே வியாதி இருக்கும் என்கிறார். ஆனால் வியாதி என்பது அனைவருக்கும். பொதுவே. செல்வந்தன் சோதித்து அறிந்து கொள்கிறான். வறியவர்களுக்கு அவ்வாய்ப்பில்லை. பணியிலிருந்து ஓய்வுறுதல் அரிது. ஓய்வுறுபவர்களும் ஒரு தாழ்வு மனநிலை ஏற்பட்டு விடும். கவிஞர் ஓய்வூதியர்களுக்காக கவலை கொண்டு எழுதிய ஹைக்கூ திண்டாட்டம் மூலம் முந்தையற்கு மாறுபட்டு செல்வமிருக்குமிடமே வியாதி இருக்கும் என்கிறார். ஆனால் வியாதி என்பது அனைவருக்கும். பொதுவே. செல்வந்தன் சோதித்து அறிந்து கொள்கிறான். வறியவர்களுக்கு அவ்வாய்ப்பில்லை. பணியிலிருந்து ஓய்வுறுதல் அரிது. ஓய்வுறுபவர்களும் ஒரு தாழ்வு மனநிலை ஏற்பட்டு விடும். கவிஞர் ஓய்வூதியர்களுக்காக கவலை கொண்டு எழுதிய ஹைக்கூ

"சமுதாயம் ஏளனப் பார்வை
ஒதுக்கப்பட்டு விட்டோமா நாம்?
ஓய்வூதியக்காரர் நிலை" என்பதாகும்.

"பலபிள்ளை பெற்றவளுக்கோ
கருவுறாதிருக்க கர்ப்பத்தடை
மலடிக்கு மங்கலவிழாவிலே தடை"

மூலம் பெண்ணியம் பேசியுள்ளார். மலடிக்காக வாதாடியுள்ளார். தடைக்கு தடை கோரியுள்ளார். பெண்ணியம் பேசும் இன்னொன்று

விதவை சூடினாள் மாலை
தன் காலில் நிற்கும் எழுச்சிப்பெண்
வாழ்த்துப்பா மாலையுடன் புகழ்மாலை"

என விதவைத் திருமணத்தை ஆதரிக்கிறார். ஆதரிக்க அறிவுறுத்துகிறார். மனிதர்களை பாடிய கவிஞர் பறவையினத்தையும் பாடியுள்ளார்.

"குஞ்சின் கூக்குரல்
காகங்கள் படையெடுப்பு
வளர்ப்புத்தாய் மனமோ?"

என்பது நெகிழ்த்துகிறது. வளர்ப்புத்தா யெனினும் பாசம் மாறாது என்கிறார்.

"சூறாவளிக்காற்று
மாமரத்துடன் மோதல்
சிறார் கையில் மாங்காய்கள்"

என்பது ஹைக்கூ அனுபவத்தைத் தருகிறது. எதிர்பாராத ஒரு திருப்பத்தைத் தந்து ஹைக்கூவாகிறது.

'அம்மா என் ஹைக்கூ' மூலம் வாழ்வின் பலவகையான கூறுகளையும் ஹைக்கூவாக்கித் தந்துள்ளார். 'கடுகு வயல்' தொகுப்பில் எழுதியதை விட இதில் சிறப்பாய், செறிவாய் எழுதியுள்ளார். சொற்களைக் குறைவாகவே பயன்படுத்தியுள்ளார். ஹைக்கூவில் எவரும் பாடாதவற்றையும் பாடித் தொகுப்பை கவனிப்பிற்குரியதாக்கியுள்ளார். தமிழ்க் காலாச்சாரத்தையும் மேனாட்டு கலாச்சாரத்தையும் பதிவித்து சிறந்தது எதுவென வாசகரை உணரச் செய்கிறார். கவிஞர் புலம்பெயர்ந்தவராயினும். ஹைக்கூக்களை பொதுவாக எழுதியுள்ளார். ஜெர்மனியில் வசிப்பு எனினும் தமிழ் அடையாளத்தோடு ஹைக்கூ எழுதி இருப்பது சுட்டத்தக்கது. கவிஞரின் ஹைக்கூ பணி தொடர்வது நல்லது. தொடர வாழ்த்துக்கள்.

கவிஞர். **பொன். குமார்**
21/15 திருச்சிக்கிளை வடக்குத் தெரு,
லைன்மேடு, சேலம் - 636 006
செல் : 99653 20673, 98659 09969, 99420 52775



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலம் பெயர்ந்த கவிதைகளாய் ...

## அம்மா என் ஹைக்கூ

ஜென்னின் தத்துவத்தை உலகிற்கு உணர்த்த ஒரு வடிவம் தேவைப்பட்டது. அதனை மெய்ப்பிக்கும் வகையில் உதிர்த்த பூவே ஹைக்கூ, மௌனங்களின் மூலம் எதனையும் சாதிக்கவல்ல ஆயுதம் போலவே, தங்களது அகக்கண்களால் கற்றுணர்ந்த ஹைக்கூ; நாளடைவில் தமிழிலும் வேர்விட்டுப் பரவியது.

எளிய நடை, சிறிய வடிவம், சீரிய கருத்து என்கின்ற கோட்பாட்டு வட்டங்களுக்குள் சுற்றித் திரிந்த ஹைக்கூ கவிதைகளை நம்மவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவக் கூறுகளின் வாயிலாக வாசக விழிகளுக்கு விருந்து படைக்கத் துவங்கினார்.

இதழ்களின் வெற்றிடத்தை நிரப்புவதாக குற்றம் சாட்டப்பட்ட ஹைக்கூ கவிதைகள் இன்று பல இதழ்களில் சிறப்பு வெளியீடாக வருவதும், பல பல்கலைக் கழகங்களில் பாடநூலாகவும் ஆக்கப்பட்டிருப்பது ஹைக்கூவிற்கு கிடைத்த பெருமை, மிக குறுகிய காலங்களிலேயே அதிக வாசகர்களையும் கவிஞர்களாக்கி வருகிறது ஹைக்கூ.

ஒவ்வொரு படைப்பாளிகளுக்குள்ளும் எழும் சமூகத்தீயில் தத்தமது குறியீடுகளின் மூலம், வெளியுலகிற்கு தெரியப்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் கவிஞர் விக்னா பாக்கியநாதன் அவர்களின் 20வது நூலாக 'அம்மா என் ஹைக்கூ' எனும் ஹைக்கூ கவிதை நூல் மலர்ந்துள்ளது.

தலைப்பையே ஒரு கவிதையைப் போல படைத்துள்ள கவிஞர் தான் வாழ்ந்த / வாழுகிற சுற்றுச்சூழல், இனவெறி, மாந்தநேயம், சுகாதாரக்கேடு என பலதரப்பட்ட கருத்துகளைக் கொண்ட ஹைக்கூக்களை படைத்திருப்பது பாராட்டுக்குரியது.

**நடக்க நடக்கத்**

**தொடர்ந்திடும் நிழல்**

**முடிவற்ற ஆசைகள்**

- வெறும் சொல்லாடல்களால் நிரம்பியதைப் போல் தோன்றினாலும், ஆசையே துன்பத்திற்கு காரணம் என்கின்ற புத்தரின் சித்தாந்தத்தை உள்ளடக்கியதாக வெளிப்பட்டிருக்கிறது. நிழலாவது இருளில் மறைந்து விடும். ஆசை.. அது முடிவுகளற்றது... என ஆசையையும் நிழலையும் ஒரே நேர்க்கோட்டில் பயணப்பட வைத்திருக்கின்றார்.

**எல்லாமே கிடைக்கின்றன**

**புலம் பெயர் வாழ்வில்**

**உண்மைப் பாசம் தவிர்த்து**

- பல தரப்பட்ட இன்னலுக்கு ஆட்பட்டு, வேறு வழியின்றி; தான் பிறந்து வளர்ந்த, தன் சொந்த மண்ணைவிட்டுப் புலம் பெயரும் போதும், தாய்மொழியையும், தன்னம்பிக்கையும் கொண்டு வெற்றி பெறுகிற போதும், ஏதோ ஒன்று நம் ஆழ்மனதை சல்லடையாக்கிக் கொண்டே இருக்கிறது.

திசையெங்கும் அழுகுரல்கள், சிறு மகிழ்ச்சிகள், பெருஞ்சோகங்கள் என தொடர் போராட்டத்தின் வெளிப்பாட்டினை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதை.

இது போன்ற கவிதைகளால் படிக்கின்ற வாசகனுக்கு அவ்வூரின் நிலை மற்றும் படைப்பாளியின் நிலையை வெகு சுலபமாக அடையாளங்கண்டு உணர முடியும்.

**மண்ணில் விதையாகப் புதைப்பு**

**மாவீரர் தமிழீழத்திலே**

**முளைவிடுதல் சுதந்திரம்**

– சமூகத்தில் படைப்பாளி என்பவன், தான் வாழுகின்ற வாழ்வின் முறைகளை மட்டுமே பதிவு செய்தல் ஆகாது. அவன் கண்ட தேசத்தின் அனைத்து நிகழ்வுகளையும், குறிப்பாக மக்களுக்கெதிரான அநீதிகளை சுட்டெரிக்கும் நெருப்பாகவும் மாறவேண்டும். அத்தகைய கவிதையாக பயிரிடப்பட்டிருக்கிறது. இக்கவிதை. எனினும் ஹைக்கூ ஒருமையாக மலர்ந்துள்ளது.

**கோடைகால வெப்பம்**
**தாகத்துடன் வீடு செல்ல**
**பொய்கையாக என் மழலை**

– என தாகம் தீரும் போதும்...

**எங்கே அழுக்கு?**

**மழலையின் உடல்**

**தாய்க்கு நறுமணம்**

– என நுகர்கின்ற போதும்...

**குழலிசையும் யாழிசையும்**

**எங்கிருந்து வருகின்றன**

**பிரசவ விடுதி அதோ**

– என ஆச்சரியப்படும் போதும்... இவர் மழலைப்பிரியர் எனக் கண்டுணரலாம்.

மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றுஅவர் சொல்கேட்டல் இன்பம் செவிக்கு.

என அய்யன் வள்ளுவனின் குறளுக்கேற்ப, குழந்தைகளின் குறும்புகளையும், அவர் பால் கொண்டுள்ள அன்பினையும் பல இடங்களில் ஹைக்கூவாக்கியிருப்பதில் இருந்து இவர் மழலைப்பிரியர் என அறிய முடிகிறது.

"புலத்திலே எம்மவர்களின் வாழ்வியல் முறைகளும், தாயகத்துச் சூழ்நிலைகளும் எம் இதயங்களில் ஏற்படுத்திய இரணங்களே இங்கு ஹைக்கூவாக பிறப்பெடுத்துள்ளன..." என்கின்ற கவிஞர் விக்னா பாக்கியநாதன் அவர்களின் என்னுரையிலிருந்து இத்தொகுப்பின் வலியை நாம் உணர முடிகிறது. தனது ஆசிரியப் பணியினூடே தமிழுக்காகவும், தமிழருக்காகவும் தன் இனம் காக்கப் பாடுபட்டுவரும் கவிஞருக்கு பாராட்டுக்கள்.

வார்த்தைகள் நீண்டு, தொகுப்பை வாசிக்க சற்றே சிரமப்படுத்தினாலும், அதில் புதைந்துள்ள நெருப்பு விதைகள் தொகுப்பைத் தூக்கி நிறுத்துகின்றன. அம்மா என் ஹைக்கூ – மன நிறைவைத் தருகிறது.

***அனைத்து மொழிகளையும் நேசிப்போம்! அன்னைத் தமிழை சுவாசிப்போம்!***

கவிஞர். கன்னிக்கோவில். **இராஜா**
30/8, கன்னிக்கோவில் முதல் தெரு,
அபிராமபுரம், சென்னை – 18
செல் : 98412 36965



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுத் தூரிகை



உங்களின் நூலில்

**"பழுப்புநிற மேலாடை**

**மண்ணிற்கு மரத்தின் தானம்"** - என இலையுதிர் கால இயற்கையை ரசிக்கின்றீர்.

**"தொலைக்காட்சி ஈர்ப்பு**

**தொற்றிடும் சோம்பல்"** - என சிந்தனை சிதறடிப்புக்குச் சவுக்கடி கொடுக்கின்றீர்.

**"பட்டமரம் வாடிய செடி**

**திடீரென துளிர்ந்த அதிசயம்"** - என மறுமண மணமக்களின் மனங்களைக்காட்டி யுகப்புரட்சி தொடங்கிவைத்து பெருமை கொண்டிருக்கிறீர்.

**"தட்டு நிறைய உணவு**

**ஏழை சிறுவனின் மனநிறைவு"** - என வறுமைக்கு உணவு கூட பகல் கனவென்று வருந்தியுமிருக்கிறீர்.

**"போட்டி போட்டு உழைப்பு**

**இயந்திரங்களுடன் மனிதர்கள்"** - என இதயங்கள் இயந்திரமானதைச் சாடுகின்ற நீங்கள்

இத்தொகுப்பில் உண்மையிலேயே

"அறிவுத் தூரிகை கொண்டு
மனத்தூசு அகற்ற சொல்லிக் கொடுத்திருக்கின்றீர்"

உண்மையில் உங்கள் எழுத்துக்கள் வெறும் இதழ் புகுந்த எழுத்துக்கள் அல்ல இதயம் புகுந்து விடத் துடிக்கின்ற வைர வரிகள்.

அன்புடன்
கவிஞர். **ஆ. குமாரி லெட்சுமி**
அன்னை இல்லம்
73, நேரு நகர் முதல்தெரு, டி.வி.எஸ் நகர்
மதுரை - 625 003
தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்.

# திருமதி. **விக்னா பாக்கியநாதன்** பற்றி...

ஆழமான முத்துகளின் அணிவகுப்பாய்க் காலத்தை
வெல்ல வந்த ஹைக்கூ பாக்கள்.
கவிஞர் திருமதி. விக்னா பாக்கியநாதன் அவர்களின்
ஹைக்கூக் கவிதைகள்.

**- கவிஞர் கதிர்ச்செல்வன்,** ஜெர்மனி

உங்கள் கவிதையால் உலுக்கி எடுத்து விட்டீர்கள்!
அற்புதத்திறமை வாழ்க! தமிழ் கூறும் நல்லுலகம்
உங்களைப் போற்றும்.

**- கவிஞர் இரா. இரவி.** மதுரை, இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org